**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 2685/2016**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **மாரியப்பன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (12.01.2026)

Accused absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தென்காசியில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 2016ம் வருடம் ஒருநாள் மாலை 04.00 மணிக்கு தர்மராஜ் என்பவரிடம் நான் தென்காசியில் பழைய பஸ்ஸ்டாண்ட் ரோட்டில் உள்ள கரூர் பில்டிங்கில் வந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த இடத்திற்குரிய ஜெராக்ஸ் காப்பியை தர்மராஜ் என்பவர் என்னிடம் கொடுத்து விற்றுக்கொடுக்க சொன்னதால் நான் பார்க்க வந்தேன். நான் அந்த இடத்தை பார்வையிட்டு கொண்டிருக்கும்போது சுமார் 4 பேர் அந்த இடத்திற்கு வந்து என்னை பார்த்து இந்த இடத்திற்குள் நீ வரக்கூடாது என்று தேவடியா மவனே, உள்ளே வந்தால் வெட்டி கொன்றுவிடுவேன் என்று அவதுறாக பேசினார்கள். நான் அப்போது அவர்களிடம் இடத்திற்குரிய நகல் என்னிடம் உள்ளது. அவர்கள் சொல்லிதான் நான் இடத்திற்கு வந்தேன். அவதுறாக பேசாதீர்கள் என்று நான் அவர்களிடம் மன்றாடி கேட்டேன். அப்போது 4 பேரும் என்னை சென்டிரிங் கம்பால், கம்பியால் என்னை தலையிலும், கையிலும், முதுகிலும், வயிற்றிலும், முட்டிலும் அடித்தார்கள் .எனக்கு ரத்தக்காயம் ஆனது. நான் அந்த இடத்திலேயே மயங்கி கீழே விழுந்துவிட்டேன். பத்து நிமிடம் கழித்து எழுந்து பார்த்தபோது யாரும் அங்கே இல்லை. என்னால் நடக்க முடியவில்லை. தவண்டு தவண்டு மெயின்ரோட்டிற்கு வந்தேன். அந்த வழியாக வந்த இரண்டு நபர்கள் என் வண்டியை எடுத்து என்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

கொண்டு மருத்துவமனைக்கு முன்பு விட்டு விட்டு போய்விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும்போது 4 பேர் அடித்ததாக சொன்னேன் ஆனால் போலீசார் இரண்டு பேர் அடித்ததாக மட்டுமே சேர்த்துள்ளார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.01.12 17:18:16 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai